நாள்- 21 .02.2022
Case No.OS.148/2016
PW.1-பலராமன் - பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எந்த சர்வே எண்ணில் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சர்வே எண் தெரியவில்லை. அதன் விஸ்தீரணம் 1744. தேவராஜன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். நான் வாங்கிய கிரையத்தின் அடிப்படையில் பட்டா பெற்றேனா என்றால் ஞாபகமில்லை. என் பெயரில் பட்டா வாங்குவதற்காக மனு ஏதாவது கொடுத்தேனா என்றால் அதுவும் ஞாபகமில்லை. இன்றைய தேதிவரை சொத்தை நான்தான் அனுபவிக்கிறேன் என்பதற்கு கிரைய ஆவணத்தை தவிர்த்து வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை பட்டா பெறவும் மனு செய்யவில்லை என்றால் சரியல்ல. சாலம்மாள் எனது உடன்பிறந்த அக்கா. அவருக்கு ஒரு ஆண், ஒரு பெண் பிள்ளைகள் சம்பத், நாகராணி. சாலம்மாளுக்கு எந்த ஆவணங்களையும் வேறு யாருக்கும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் என் மனைவி பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார். நான் கிரையம் வாங்கிய சொத்தை எவ்வாறு சாலம்மாள் எழுதி கொடுக்கமுடியும் என்று சொன்னால் நான் சாலம்மாளுக்கு எழுதி கொடுத்தேன். சாலம்மாள் என் மனைவி பெயருக்கு எழுதி கொடுத்தார். நான் சாலம்மாளுக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாலம்மாள் என் மனைவி பெயருக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் தானசெட்டில்மெண்டில் அவரது மகன் சம்பத் கையெழுத்து எதுவும் போட்டுள்ளாரா என்றால் கையெழுத்திட்டுள்ளார். சம்பவத் 5 வது வரை படித்துள்ளார். தமிழில்தான் கையெழுத்து போடுவார். என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சம்பத்தின் கையெழுத்துள்ளதா என்றால் இல்லை என்றால் சரிதான். இன்னொரு பத்திரத்தில் கையெழுத்திட்டுள்ளார். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவி 2003 ஆண்டு இறந்தார். சாட்சி பின்னிட்டு ஞாபகமில்லை என்று கூறினார். எனது மனைவி 2003 ம் ஆண்டு இறந்திருந்தால் 2005 ல்

தானசெட்டில்மெண்ட் கொடுத்திருக்க வாய்பில்லை என்று சொன்னால் எனது மனைவி இறந்த வருடம் எனக்கு ஞாபகமில்லை. தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பவர் பத்திரத்தில் உள்ள நகல்கள் யார் என்றால் சாட்சி அதிலுள்ள புகைப்படத்தை பார்த்து எனது மகன், மகள்கள் எனக்கு எழுதி கொடுத்துள்ளார். எதற்காக பவர் கொடுத்தார்கள் என்றால் மேற்படி சொத்தை நான் என்னவேண்டுமானாலும் செய்யலாம் என எனக்கு எழுதி கொடுத்தார்கள். 2010 ஆண்டு சம்பத் எங்களது பெயரில் பாகப்பிரிவினை வழக்கு போட்டார்கள் என்றும் அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் இந்த பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் ஞாபகமில்லை. வழக்கு நிலுவையில் உள்ளபோது எழுதப்பட்ட பொதுஅதிகார பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து மூதாதையர் சொத்து என்றும் நான் எந்த சொத்தையும் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக நான் வாங்கிய சொத்து என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையமாக பெற்றிருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் மூதாதையார் சொத்து என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2005 ஆண்டிலிருந்தே சாலம்மாள் உடல்நிலை சரியில்லாமல் படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றும் அவர் சார்பதிவாளர் அலுவலகம் வந்து தானப்பத்திரத்தை எழுதி கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.